[திருமதி ரமணி நல்லதம்பி] [1993 ஏப்ரல் 16

நிறுத்திவிட்டு இப்போது மேல்நிலைப் பள்ளிக்கூடத்திலேயும் 2 ஆண்டு பயிற்சி என்கின்ற நிலையிலேயும், ஆசிரியர் பயிற்சி பள்ளிக்கூடங்களிலேயும் 2 ஆண்டு என்கின்ற நிலையிலேயும் நீங்கள் அறிமுகம் செய்வதை நான் வரவேற்கின்ற வேளையிலே, இந்த தனியார் கல்விக் கூடங்களிலே ஏறத்தாழ 100 மேல் நிலைப் பள்ளிகளிலே—நீங்கள் அரசு பள்ளிகளிலே ஆசிரியர் பயிற்சியை அறிமுகம் செய்து இருக்கின்ற அதே வேளையிலே தனியார் பள்ளிகளுக்கு நீங்கள் கொடுத்து இருக்கின்ற காரணத்தினாலே, அங்கே பயிலாதவர்களுக்கு எல்லாம் பயின்றதாக, அங்கே ஒரு பெரிய தொகையைப் பெற்றுக்கொண்டு ஃபால்ஸ் அட்டன்டன்ஸ் கொடுத்து அவர்களை அந்தப் பரீட்சைக்கு அனுப்புகின்ற காரணத்தினால்—2 வருடம் அவர்கள் மேல் நிலைப்பள்ளியிலே அல்லது அரசு கல்வி டிரெயினிங் இன்ஸ்டிடியூஷனிலே படிக்கிறார்கள். தனியார் பயிற்சி பள்ளிகளில் அந்த 2 வருடம் சரியாக அட்டண்ட் பண்ணாமலே சான்றிதழ்களை ஃபால்ஸாக கொடுக்கப்பட்டு, கவர்ன்மென்ட் எக்ஸாமினேஷனுக்கு அனுப்புகின்ற காரணத்தினாலே— அங்கே அவர்களுடைய தேர்வும் குறைவதற்கு வாய்ப்பு இருக்கின்றது. இதனாலே, ரெகுலராக படிக்கின்றவர்களுடைய மத்தியில் அதிருப்தி ஏற்படுகின்றது. ஆகவே, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கல்வி அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்காகத்தான் ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்கின்றபோது ஒரு தனித் தேர்வு நடத்த நாம் உத்தேசித்து இருக்கின்றோம். அப்படி வருகின்றபோது யார் நன்றாகப் படித்து இருக்கின்றார்களோ அவர்கள்தான் தேறி அந்தப் பணிக்கு வர முடியும்.

5. அறிக்கைகள் அளித்தல்.

(அ) பொதுக்கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குழுக்களின் அறிக்கைகளை அளித்தல், பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. பெ. பொன்னுசாமி இருக்கையில் இல்லை. டாக்டர் ஸ்ரீதரன், பொதுக் கணக்குக் குழுவின் உறுப்பினர். (குறுக்கீடு) நான் அடுத்த பிசினஸுக்கு போய்விட்டேன். (குறுக்கீடு) இன்றைய அடுத்த அலுவலை எடுத்து ஆகிவிட்டது. (குறுக்கீடு) உங்களுக்கு கொடுத்த வாய்ப்பை நீங்கள் பயன்படுத்த வில்லை. இனிமேல் நான் ஒன்றும் செய்ய முடியாது. (குறுக்கீடு) விதியிலே எந்த வகையிலேயும் இடம் இல்லை. திரு. வரதன் உட்காருங்கள்.

1993 ஏப்ரல் 16]

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : அவர் கவன ஈர்ப்பு பற்றி கேட்கும் முன்னாலேயே வந்துவிட்டார். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதல் கவன ஈர்ப்பின் போது பதில் சொல்லிக்கொண்டு இருந்த நேரத்திலே வந்தது. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. நான் ஏற்கெனவே அடுத்த அலுவலை ஆரம்பித்ததற்குப் பிறகு, இன்றைக்கு 2 கவன ஈர்ப்பு முடிந்ததற்குப் பிறகு இப்போது நீங்கள் எழுப்ப முடியாது. (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டு, கவன ஈர்ப்புத் தீர்மானம் முடியும் முன்பே உறுப்பினர் போளூர் வரதன் அவர்கள் உள்ளே வந்து விட்டார். கவன ஈர்ப்பை எடுத்துக்கொள்ளும்படி அவர் கேட்கின்ற போது அதிலே ஒன்றும் தவறு கிடையாது. வேறு நபரை அனுமதிக்கிறீர்கள். கவன ஈர்ப்புக்கான பதிலும் இங்கே வைக்கப்பட்டு இருக்கிறது; அந்த பதில் வைக்கப்பட்டதாக அவைக் குறிப்பிலே வர வேண்டும்; வேறு ஒன்றும் கிடையாது; ஒரு கேள்வியை அவர் கேட்கப் போகிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, இல்லை. அவர் கவன ஈர்ப்புக் கொடுக்கவில்லை; 'ஸ்பெஷல் மென்ஷன்' கேட்டு இருக்கிறார். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, விதி 55-ல் கொடுத்து இருக்கிறார் என்று கருதிக்கொண்டு நீங்கள் பேசுகிறீர்கள். அவர் இந்த வாய்ப்பை நழுவ விட்டதற்கு, இன்றே இப்போதே விதி 55-ல் கொடுக்கட்டும்; நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம். (குறுக்கீடுகள்) இல்லை, இது போய் விட்டது. இன்று அமைச்சரே அந்த பதிலுக்குத் தயாராக இருந்த காரணத்தால், உறுப்பினர் விதி 55-லே கொடுத்தால் திங்கட் கிழமை காலையில் விதி 55-ல் அவருடையதை எடுத்துக் கொள்ள லாம். டாக்டர் ஸ்ரீதரன்.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992-93 ஆம் ஆண்டிற்கான பொதுச் கணக்குக் குழுவின் பின்வரும் அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

1. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1971-72 ஆம் ஆண்டுக்கான (சிவில்) அறிக்கைகளின் மீது பொதுக் கணக்குக் குழு அளித்த ஏழாவது அறிக்கை (எட்டாவது பேரவை) மற்றும் முப்பத்தொன்றாவது அறிக்கை (ஒன்பதாவது) பேரவையின்) வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை குறித்து மேலும் தொடரப்பட்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய குழுவின் நூற்று ஒன்றாவது அறிக்கை.

[டாக்டர் அ. ஸ்ரீதரன்] [1993 ஏப்ரல், 16

2. இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1981 82 ஆம் ஆண்டிற்கான (சிவில்) அறிக்கையின் மீது பொதுக் கணக்குக் குழு அளித்த முப்பத்து நான்காவது அறிக்கை (எட்டாவது பேரவை) யில் தொழிலாளர் நலன் மற்றும் வேலை வாய்ப்புத் துறை குறித்த பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய குழுவின் நூற்று இரண்டாவது அறிக்கை.

3. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1977-78 மற்றும் 1978-79 ஆம் ஆண்டிற்கான (சிவில்) அறிக்கைகளின் மீது பொதுக் கணக்குக் குழு அளித்த முப்பத்தோறாவது அறிக்கை (ஏழாவது பேரவை) யில் உள்துறை குறித்த பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய குழுவின் நூற்று மூன்றாவது அறிக்கை.

முற்பகல் 11-50

4. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1979-80, 1980-81 மற்றும் 1981-82 ஆம் ஆண்டுகளுக்கான (சிவில்) அறிக்கைகளின் மீது பொதுக் கணக்குக் குழு அளித்த முப்பத்தி மூன்றாவது அறிக்கை (ஏழாவது பேரவை) யில் சில துறைகள் குறித்த பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் பற்றிய குழுவின் நூற்று நான்காவது அறிக்கை.

5. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1979-80, 1980-81 மற்றும் 1981-82 ஆம் ஆண்டிற்கான (சிவில்) அறிக்கைகளின் மீது பொதுக் கணக்குக் குழு அளித்த முப்பத்தி மூன்றாவது அறிக்கை (ஏழாவது பேரவை) யில் உள்துறை குறித்த பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைள் பற்றிய குழுவின் நூற்று ஐந்தாவது அறிக்கை.

6. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1977-78 மற்றும் 1978-79 ஆம் ஆண்டுகளுக்கான (சிவில்) அறிக்கைகளின் மீது பொதுக் கணக்குக் குழு அளித்த முப்பத்தோறாவது அறிக்கை (ஏழாவது பேரவை) யில் நிதித்துறை குறித்த பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய குழுவின் நூற்று ஆறாவது அறிக்கை.

(ஆ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மனுக்கள் குழுவின் அறிக்கையை அளித்தல். திரு. கா. ப. பட்டாபிராமன். மனுக்கள் குழுவின் தலைவர்.

* திரு. கா. ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992-93 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் பதிமூன்றாவது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.